9 செப்டம்பர் 1978]

இசுக்கழி கிராமக் கூட்டுறவு விவசாயச் சங்கம்

*வினா எண். 101—திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை வட்டம், இசுக்கழி கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கத்தில் இருந்து அண்டம்பள்ளம் விவசாயிகளுக்குக் கிடைக்க வேண்டிய கடன் வசதிகள் அனைத்தும் முழுமையாகப் புறக்கணிக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) இது குறித்து அரசு தகுந்த நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) கடன் வசதிகள் புறக்கணிக்கப்படுவதில்லை.

(ஆ) இது குறித்த வினா எழவில்லை.

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கடன் புறக்கணிக்கப்படவில்லை என்று சொன்னார்கள். இந்த இசுக்கழி கூட்டுறவு விவசாயக் கடன் சங்கத்தில் 10 ஊராட்சி ஒன்றியங்கள் இணைந்திருக்கின்றன. அந்த பத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கும் குறிப்பிட்ட காலத்தில் விவசாயிகளுக்கான கடன்களை வழங்குவதில்லை என்பதை அரசு உடனடியாகப் பரிசீலனை செய்து கடன்களை உடனடியாக வழங்க ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல் அண்டம்பள்ளி கிராமக் கூட்டுறவு விவசாயக் கடன் சங்கம் கடந்த 1975-76ஆம் ஆண்டிலிருந்து கலைக்கப்பட்டு இருக்கின்ற காரணத்தினாலே, அதுவும் போதுமான காரணங்களுக்காகக் கலைக்கப்பட்டிருக்கின்ற காரணத்தாலே அந்தச் சங்கத்திலே உள்ள விவசாய உறுப்பினர்களுக்கு, ஏறத்தாழ 1,251 விவசாயிகளுக்கு அந்த உரிமை மறுதளிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த விவசாயிகள் இசுக்கழி அருகிலேயே உள்ள விவசாயச் சங்கத்திலே போதுமான கடன் வசதி அளிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் நகைக் கடன்கள்

*வினா எண். 102—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப் பகுதியிலுள்ள விவசாய கூட்டுறவுக் கடனுதவி சங்கங்களும், கூட்டுறவு அர்பன் பாங்குகளும் நகைகள் மீது கடன் வழங்குவதில் கிராமுக்கு ரூபாய் 25/யை அதிகரிக்க அரசு உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை அதிகரிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) அண்டு (ஆ): மத்திய கூட்டுறவு வங்கிகளும் நகர வங்கிகளும், தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களும், விவசாய வங்கிகளும், விவசாயக் கடன் சங்கங்களும் நகைகள் மீது ஒரு சவரனுக்கு ரூபாய் 320 அல்லது சவரன் மீதான மார்க்கெட் மதிப்பில் 80 சதவீதம் இவற்றில் எது குறைவோ அந்த அளவிற்கு ஏற்கெனவே கடன் வழங்கி வருகின்றன.

திரு. எஸ். கணேசன் : கிராம விவசாயக் கூட்டுறவுக் கடன் உதவிச் சங்கங்களில் பெரும்பாலான சங்கங்களில் நகைக் கடன்கள் கொடுப்பதில்லை. ஒன்றிரண்டு சங்கங்களிலுல்தான் அப்படிப்பட்ட கடன் உதவி வழங்கப்படுகிறது. நாட்டில் இப்போது வட்டிக் கடைகள் மூடப்பட்டிருக்கின்றன.— அதிகமாக வட்டி வாங்குகிறார்கள் என்பதற்காக. அர்பன் பாங்குகள் மாதம் ஒன்றுக்கு இவ்வளவுதான் கடன்கள் வழங்கலாம் என்ற ஒரு வரையறை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே தமிழ்நாட்டிலுள்ள விவசாயப் பெருங்குடி மக்களும், தொழிலாளர்களும் இப்படிப்பட்ட கடன் உதவி கிடைக்காமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே அரசு மறுபரிசீலனை செய்து கிராம விவசாயக் கூட்டுறவு கடன் உதவிச் சங்கங்கள் மூலம் விவசாயிகள் கடன்கள் பெறுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய கூட்டுறவு வங்கிகளின் கிளைகள் வாயிலாகவும், கிராமக் கூட்டுறவு விவசாயச் சங்கங்களின் வாயிலாகவும், நகர வங்கிகள் வாயிலாகவும், இந்த அரசு 1976-77-ல் ரூபாய் 40 கோடி நகைக் கடனைக் கொடுத்திருக்கிறது. 1977, 1978-ஆம் ஆண்டுகளில் ரூபாய் 50.23 கோடி அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்களின் விருப்பப்படி மத்திய கூட்டுறவு வங்கிகள் கிளைகள், கிராமக் கூட்டுறவு விவசாய நாணயச் சங்கங்கள், நகர வங்கிகள் இவற்றின் மூலம் 1978-79 ஆம் ஆண்டில் ரூபாய் 70 கோடி அளவிற்கு நகைக் கடன்கள் வழங்க தமிழக அரசு திட்டமிட்டிருக்கிறது.

திரு. கே. பண்ணை சேதுராம் : தங்கத்தின் விலை ரூ. 400 ஆக இருக்கும்போது ரூ. 320 நகைக்கடன் விவசாயக் கூட்டுறவு சங்கங்களின்மூலம் கொடுக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இப்போது சவரன் விலை 600 ரூபாயாக இருக்கும்போது விவசாயிகளுக்கு அதிகப்படியாக கடன் கொடுக்க அரசு முன்வருமா? விவசாயிகள் தங்களிடம் இருக்கிற நகைகளை ஏற்கெனவே வங்கிகளில் அடமானம் வைத்துவிட்டார்கள். இப்போது புதிதாகக் கடன் பெற அவர்களிடம் போதுமான நகைகள் இல்லை. இருக்கிற நகைகளை வங்கிகளில் வைத்துவிட்ட காரணத்தினல் ரூ. 400 என்று தங்கம் விற்று

1978 செப்டம்பர் 9]

வந்தபோது ரூ. 320 கொடுக்கப்பட்டதே, எனவே, இப்போது ரூ. 600 என்று விற்கும்போது அதை அதிகப்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையை அனுதாபத்தோடு இந்த அரசு கவனிக்கும்.

(திரு எஸ். கணேசன் எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 25 கேள்விகள் இருக்கின்றன. கேட்கப்பட்ட பிரச்னைகளுக்கெல்லாம் அவர்கள் பதில் அளித்து விட்டார்கள். தயவுசெய்து உட்காருங்கள்.

கூட்டுறவுக் கடன்கள் வழங்கல்

*வினா எண் 103—திரு மா. மணிமாறன் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் காசோலை வழங்காமல் பணமாக வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தற்போது கூட்டுறவுக் கடன் சங்கங்களின் நடைமுறையில் உள்ள காசோலை வழங்கும் முறையை ரத்து செய்ய அவசியமில்லை.

திரு. மா. மணிமாறன் : காசோலை வழங்குவதால் கல்வீயறிவு இல்லாத மக்கள் பணம் வாங்கும்போது தவறுகள் ஏற்பட வாய்ப்புகள் இருக்கின்றன. பத்து கிலோ மீட்டருக்கு மேலாகச் சென்று கிளைச் சங்கங்களில் பணம் வாங்கும் இடர்பாடுகள் இருக்கின்றது. கூட்டுறவுச் சங்கங்களில் டிரான்ஸ்ஸாக்ஷன் செய்ய தனிப்பட்ட மக்கள் அச்சப்படுகிறார்கள். மூன்று மாத காலம் டிரான்ஸ்ஸாக்ஷன் அதிகமாக இருப்பதன் காரணமாக கூட்டம் அதிகமாகயிருப்பதால் அவர்கள் நேரமும் பாதிக்கப்படுகிறது. ஆகவே, இதை மறுபரிசீலனை செய்து காசோலை முறையை ஒழித்துவிட்டு எப்போதும்போல் பணமாகப் பட்டுவாடா செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த காசோலை முறை புகுத்தப்பட்டது சீரிய நோக்கோடு. போலியாக சிலர் காசுகள் பெற்றுவிடுகிறார்கள், கடன் கொடுக்கும்போது அதிகாரமற்ற பிடித்தங்கள் என்ற தவறான முறைகள் கையாளப்படுகிறது. அதோடு விவசாயப் பெருங்குடி மக்கள் வங்கிகளில் கணக்குகள் வைக்கும் பழக்கத்தை